Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 328

செவ்வாய்க்கிழமை
21 ஒக்ரோபர் 2025

ஐப்பசி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



# இசைப்பிரியா படுகொலை; சூத்திரதாரி ஹெந்தவிதாரண!

## போட்டுடைத்தார் பொன்சேகா விசாரணைக்கும் கோரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 21

இசைப்பிரியா படுகொலை செய்யப்பட்ட விடயத்தில், முன்னாள் இராணுவப் பிரதானி கபில ஹெந்தவிதாரணவின் குழுவுக்குத் தொடர்புள்ளது என்று முன்னாள் இராணுவத் தளபதியான பொன்சேகா தெரிவித்துள்ளார். 11

இந்திய இராணுவத்தின்

## யாழ்.போதனாப் படுகொலைகள் 38ஆவது நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இந்திய இராணுவத்தால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டவர்களின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது.

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய இராணுவத்தினர் நடத்திய 11



யாழ். போதனா மருத்துவமனையில்

## நீரிழிவுச் சிகிச்சைக்கு விரிவடைந்தது சேவை

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தின் சேவைகள் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள் 11

## உருவானது தாழமுக்கம்

வடக்கில் கனமழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 21

வங்காள விரிகுடாவில் முன்னறிவிக்கப்பட்டிருந்த தாழமுக்கம் நேற்று உருவாகியுள்ளது. இந்தத் தாழமுக்கம் இன்று இரவு அல்லது நாளை ஆழ்ந்த 11

செவ்வந்திக்கு அடைக்கலம்

## கிளிநொச்சியில் இருவர் கைது!



கிளிநொச்சி, ஒக். 21

கணேமுல்ல சஞ்சீவவின் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்களில் ஒருவரான இஷாரா செவ்வந்தி மறைந்திருப்பதற்கு அடைக்கலம் கொடுத்த இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 11



## டெங்குத் தொற்றால் 40,000 பேர் பாதிப்பு

விரிவு பக்கம்:- 05

இந்தியாவில்

## தமிழர் பிரதமரானால் மட்டுமே ஈழத்தமிழர்களுக்குத் தீர்வு!

திருமாவளவன் தெரிவிப்பு



சென்னை, ஒக். 21

இந்தியாவில் தமிழர் ஒருவர் பிரதமரானால் மட்டுமே ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

2026ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள தமிழக சட்டப் பேரவைத் தேர்தலை முன்னிட்டு பிரதான கட்சிகள் அனைத்தும் தேர்தல் பரப்புரைகளை ஆரம்பித் 11



முச்சந்தி முரளி

'அப்ப எங்களுக்குத் தீர்வு கடைசிமட்டும் கிடைக்காது எண்டதை உவர் குறியீடாச் சொல்லுறார் கண்டியளோ'

## இளைஞர் ஒருவர் வெட்டிக் கொலை

அக்கராயனில் கோரம்



கிளிநொச்சி, ஒக். 21

கிளிநொச்சி - அக்கராயன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஈச்சங்குளம் பகுதியில், இளைஞர் ஒருவர் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார். கௌரிராஜன் கஜன் (வயது-24) 11

## வாடகைக்கு வீடு எடுத்து கஞ்சா பயிரிட்டவர் கைது

விரிவு பக்கம்:- 02

மிகச்சிறந்த நிதி மேலாண்மை

## மத்திய வங்கி ஆளுநருக்கு வொஷிங்டனில் கௌரவம்!



கொழும்பு, ஒக். 21

மிகச்சிறந்த நிதிமுகாமைத்துவத்துக்காக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவுக்கு அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் வைத்து 'ஏ' தர விருது வழங்கப்பட் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 20.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4230 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 23 51 53 58 |
| விசேட எழுத்து | G |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 20.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1297 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 21 49 57 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 20.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0256 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 0 7 9 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 20.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2336 |
| ஆங்கில எழுத்து | O |
| சுப்பர் இலக்கம் | 22 |
| வெற்றி இலக்கங்கள் | 14 32 51 65 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 20.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5988 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 5 2 0 2 4 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 20.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2018 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 27 28 43 44 |
| விசேட எழுத்து | B |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 20.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0104 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 17 38 59 |

# தமிழருக்கு அளித்த உறுதிப்பாட்டை இந்தியா நிறைவேற்றத் தவறியுள்ளது

## தயான் ஜயதிலக சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஒக்.21**

**வடக்கு மற்றும் கிழக்குத் தமிழ் மக்களுக்காக, 40 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா திறந்துவிட்ட மாகாண அரசியலை முடக்குவது, இந்திய இராஜ தந்திரத்தின் முரணாகும் என்று கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.**

மாகாணசபைகளுக்கான தேர்தல் தொடர்ச்சியாகத் தாமதிக்கப்பட்டு வரும் நிலைமை தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம், அதன் முகப்புரையில் அரசியல் அதிகாரப்பரவலாக்கல் குறித்த தனது உறுதிப்பாடுகளை நிறைவேற்றுமாறு இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவது உட்பட, உள்ளூர் நிர்வாகத்தை மதிக்குமாறு அரசாங்கத்தை ஊக்குவிப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாணசபைத்தேர்தல்களை நடத்தவும், அத்தேர்தல் தடைப்பட்டிருப்பதற்குக் காரணமாக இருக்கும் சட்டவிடயத்தைத் தீர்க்கவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான நிர்வாகம் உறுதியளித்துள்ளது.

40 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா வடக்கு மற்றும் கிழக்குத் தமிழ் மக்களுக்காகத் திறந்து விட்ட மாகாண அரசியல்வெளி இந்திரா காந்தியின் சிறப்புத் தூதுவராக இருந்த ஜி.பி. பார்த்தசாரதியின் இளம் உதவியாளராக இருந்த தற்போதைய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி. சுப்ரமணியம் ஜெய்சங்கர் உட்பட இந்திய அரசாங்கம் ஆதரிக்கும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நிர்வாகத்தால் மூடப்படுவது இந்திய இராஜதந்திரத்தின் முரணாகும். ஒருவேளை தமிழ் மக்களுக்கான அரைசுயாட்சி அரசியல் வெளியான மாகாணசபை முறைமையானது, இந்தியா, மற்றும் அநுரகுமார அரசாங்கத்தின் கூட்டு இலாபங்களை அடைவதற்காகவும் மூலோபாயத் தடயத்துக்காகவும் பண்டமாற்றுச் செய்யப்பட்டிருக்கலாம்.

ஆனால் சீனா எப்போதும் இலங்கைக்கு அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்றியேயுள்ளது. ஆனால் இந்தியா வடக்கு மற்றும் கிழக்குத் தமிழ் மக்களுக்கு அதிகாரப்பரவலாக்கல் குறித்து அளித்த உறுதிப்பாட்டை நட்புரீதியான, நன்றியுள்ள அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோதிலும், அதனை நிறைவேற்றுவதற்குத் தவறியுள்ளது- என்றார். (க-இ)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | 
| 20.10.2025 | திங்கட்கிழமை | C | 3 8 4 6 4 2 |
| வெற்றி வாரம் | 0696 | | |

| Super Ball | | | | |
|---|---|---|---|---|
| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 20.10.2025 | திங்கட்கிழமை | 2962 | B | 45 68 73 76 |

| சனிதா | | | | |
|---|---|---|---|---|
| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| 20.10.2025 | திங்கட்கிழமை | G | 03 45 74 76 | 5123 |

| லக்ன ராசி | | | | |
|---|---|---|---|---|
| திகதி | தினம் | | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| 20.10.2025 | திங்கட்கிழமை | விருச்சிகம் | 39 46 60 61 | 4674 |

| KAPRUKA | | | | | |
|---|---|---|---|---|---|
| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| 20.10.2025 | திங்கட்கிழமை | B | 13 | 14 22 47 60 | 2138 |

| அத கோடிபதி | | | | |
|---|---|---|---|---|
| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| 20.10.2025 | திங்கட்கிழமை | L | 08 54 75 76 | 2788 |

| JAYODA | | | | |
|---|---|---|---|---|
| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| 20.10.2025 | திங்கட்கிழமை | Q | 40 44 48 57 | 2171 |

# அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.21

பருத்தித்துறைப் பிரதேசசபைக்குட்பட்ட புலோலி ஆறாம் வட்டாரத்துக்கான 2026ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டக் கலந்துரையாடல் பிரதேசசபையின் புலோலி உப அலுவலக மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. கலந்துரையாடலில் பிரதேசசபைத் தவிசாளர் உ.யுகதீஷ், பிரதேசசபை உபதவிசாளர், பிரதேசசபைச் செயலாளர், ஆறாம் வட்டார உறுப்பினர், அப்பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-41-100)

# வாடகைக்கு வீடு எடுத்து கஞ்சா பயிரிட்டவர் கைது

கொழும்பு, ஒக்.21

காலி, அக்மீமனப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் கஞ்சா பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட வெளிநாட்டுப்பிரஜை ஒருவர் காலி மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் பெலாரஸ் நாட்டைச் சேர்ந்தவராவார்.

இவர் அக்மீமனப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டு இரண்டு அறைகளில் மிகவும் சூட்சுமமான முறையில் கஞ்சாச் செய்கையை மேற்கொண்டுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகளுக்கு விற்பனை செய்யும் நோக்கத்தில் கஞ்சாவை அவர் பயிரிட்டுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த வீடு மருத்துவர் ஒருவருக்குச் சொந்தமானது எனவும் சந்தேக நபரான வெளிநாட்டுப்பிரஜை இந்த வீட்டை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது. (எ-இ)

# மாவட்ட அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமங்கள்

கொழும்பு, ஒக்.21

அடுத்த ஆண்டு முதல் குருநாகல், பதுளை மற்றும் அம்பாறை மாவட்ட அலுவலகங்கள்மூலம் ஒரு நாள் சேவையின் கீழ் ஓட்டுநர் உரிமங்களை அச்சிடத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மோட்டார் போக்குவரத்துத்துறை தெரிவித்துள்ளது.

இந்த ஒரு நாள் சேவை தற்போது வேரஹெர மற்றும் ஹம்பாந்தோட்டை அலுவலகங்கள்மூலம் மட்டுமே வழங்கப்படுகின்றது.


மோட்டார் போக்குவரத்துத்துறையின் வேரஹெர டிஜிற்றல் அமைப்புடன் 12 மாவட்ட அலுவலகங்கள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளன என்றும், மீதமுள்ள 13 மாவட்ட அலுவலகங்களும் இந்த அமைப்புடன் இணைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என மோட்டார் போக்குவரத்துத்துறையின் மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)



தீபாவளித் திருநாளை முன்னிட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் நேற்றுத் திங்கட்கிழமை சிறப்பு அபிஷேகம், பூஜை வழிபாடுகள் என்பன இடம்பெற்றன. வசந்தமண்டபப் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமான் இடபாரூடராக உள்வீதியுலா வரும் திருக்காட்சி நடைபெற்றது. (எ-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியில் தேங்கும் வெள்ளம் பயணிகள் பெரும் சிரமம்!



**யாழ்ப்பாணம், ஒக்.21**
**கொழும்புத்துறை விபுலானந்தா வீதியை மூடி மழைவெள்ளம் தேங்கியிருப்பதால், குறித்த வீதியூடான போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.**

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண மாநகர சபையின் நிதியூடாக குறித்த வீதியில், வெள்ளவாய்க்கால் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. வாய்க்கால் அமைப்பதற்குத் தேவையான கற்கள் உள்ளிட்ட கட்டுமானப் பொருள்களும் தருவிக்கப்பட்டன. எனினும் சில அரசியல்வாதிகளின் தலையீட்டால், பணிகள் இடைநிறுத்தப்பட்டதுடன், வீதியில் இறக்கப்பட்ட கட்டுமானப்பொருள்கள் மீள ஏற்றப்பட்டு, வேறு பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டன. இடைநிறுத்தப்பட்ட பணிகளை மீண்டும் முன்னெடுத்து வீதியூடான போக்குவரத்தைச் சீர்செய்யவேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-20)


படங்கள் ஐ.சிவசாந்தன்

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று தீபாவளிதின சிறப்புப் பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

## துணுக்காய்க்கு கோட்டக் கல்வி அதிகாரி நியமனம்

முல்லைத்தீவு, ஒக்.21
துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இ.கோகுலன் தனது பதவியைப் பொறுப்பேற்றுள்ளார். மாங்குளம் மகாவித்தியாலய அதிபராக கடமையாற்றிய கோகுலன் பதவியுயர்வுபெற்றநிலையில் கோட்டக்கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.(ஏ-41-27)



# முல்லை. மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறை

### உரிய நடவடிக்கை எடுக்குமாறு ரவிகரன் எம்.பியிடம் கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக்.21
முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் நிலவும் மருத்துவர்கள் பற்றாக்குறையை உடனடியாக நீக்கி, நோயாளர் சேவைகளைத் திறம்பட முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மருத்துவமனை நிர்வாகத்தினர், நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் கோரிக்கை விடுத்தனர்.

மருத்துவமனைக்கு களப்பயணம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளர் மற்றும் நலன்புரிச்சங்க நிர்வாகத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். சிறுநீரக மருத்துவ நிபுணர், நுண்ணுயிரியல் மருத்துவர், நரம்பியல் மருத்துவ நிபுணர் உள்ளிட்ட மருத்துவர்கள் இல்லாமையால், வினைத்திறனான சேவைகளை மக்களுக்கு வழங்க முடியாதுள்ளது. பெண்நோயியல் மருத்துவ நிபுணர் மற்றும் குழந்தைநல மருத்துவ நிபுணர் தலா ஒவ்வொருவரே கடமையில் உள்ளனர். குழந்தைநல மருத்துவ நிபுணருக்கும் தற்போது இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலீடாக நியமிக்கப்பட்டுள்ள குழந்தைநல மருத்துவர் மகப்பேற்று விடுமுறையில் இருப்பதால், தற்போது கடமையில் ஈடுபட்டிருக்கும் குழந்தைநல மருத்துவரை இதுவரை விடுவிப்புச் செய்யாமல் உள்ளோம். பதிலீட்டுக் குழந்தைநல மருத்துவர் கடமைப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னரே தற்போது கடமையிலுள்ள குழந்தைநல மருத்துவர் இடமாற்றத்துக்கு எம்மால் அனுமதிக்க முடியும் என்று பிரதிப்பணிப்பாளர் சுட்டிக்காட்டினார். அதே வேளை சட்டமருத்துவ அதிகாரி இல்லாமையால், இறப்பு விசாரணைகள் மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனை உள்ளிட்ட விடயங்களைக் கையாள்வதில் பல்வேறு இடர்நிலைகள் ஏற்பட்டுள்ளன என்று நிர்வாகத்தினர் சுட்டிக்காட்டினர். இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர், மருத்துவ நிபுணர்கள் மற்றும் நோயாளர் விடுதி பற்றாக்குறை தொடர்பில் ஏற்கனவே சுகாதார அமைச்சருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (க-246)




## ஒரு ஆணியும் பிடுங்கேலை

இப்ப இலங்கை முழுக்க செவ்வந்தியைப் பற்றித்தான் ஒரே கதை. கொலை ஒண்டைச் செய்யிறதுக்கு காரணமா இருந்த செவ்வந்தியை, ஏதோ பெரும் சாதனை செய்துபோட்டு இலங்கைக்கு வாறமாதிரி, அவா எயார்ப் போர்ட்டுக்கு வரும் வரைக்கும் 'செவ்வந்தி அங்க ப்ளைட் ஏறிட்டா,' 'இன்னும் கொஞ்சத்தில கட்டு நாயக்கவில கால் வைச்சிடுவா' எண்டெல்லாம் லைவ் செய்தி போட்டு இஞ்சத்த ரீவிக்காரரும், யூரியூப்காரரும் செய்த கூத்துகளைப் பாக்க கடுப்புத்தான் வந்தது. செவ்வந்தி எண்ட பேரோட இப்ப இன்னுமொரு ஆளும் பேமஸாகத் தொடங்கியிருக்கிறார். அவர்தான் றொஹான் ஒலுகல்ல. நேபாளத்தில ஒளிச்சிருந்த செவ்வந்தியை சிங்கம் பட சூர்யா மாதிரி. அரஸ்ட் பண்ணி இழுத்துக்கொண்டு வந்த வீரர், சூரர் எண்டெல்லாம் றொஹான் ஒலுகல்லவை அரசாங்கமும்,சோசல் மீடியாக்காரரும் தலையில தூக்கி வைச்சுக் கொண்டாடுகினம். ஆனால் அப்பிடிக் கொண்டாடுற அளவுக்கு ஒலுகல்ல வீரர், சூரர் தானோ?

செவ்வந்தியைமட்டுமில்லை,இந்தோனேசியாவில ஒளிச்சிருந்த கெஹெல்பத்தர பத்மேயையும் அவரின்ர கூட்டாளிமாரையும் பிடிச்சுக் கொண்டந்ததும் இதே றொஹான் ஒலுகல்ல எண்டுதான் அரசாங்கம் சொன்னது. ஆனால் இந்தச் செய்தி இந்தோனேசியப் பொலிஸின்ர காதில விழுந்ததும், அவை றென்சனாகிட்டினம். அதுக்குப் பிறகுதான் அவை தங்கட நாட்டு மீடியாக்களுக்கு எப்பிடி கெஹெல்பத்தர பத்மேயையும், அவரோட இருந்தவையையும் சுத்திவளைச்சுப் பிடிச்சம் எண்ட வீடியோவைக் குடுத்தவை. அந்த வீடியோவில ஒரு ஓரத்திலகூட உந்த றொஹான் ஒலுகல்ல கண்ணில தட்டுப்படவேயில்லை. இந்தோனேசியப் பொலிஸ்காரர்தான் இங்கிலிஷ் படங்களில வாறமாதிரி, அதிரடியா ஹொட்டலுக்க புகுந்து அங்க இருந்த உந்தக் காவாலியளை அள்ளிக்கொண்டு வந்தவை எண்டதை அந்த வீடியோவைப் பார்த்த எல்லாருக்கும் நல்லாவே தெரிஞ்சது. அப்பிடி இந்தோனேசியப் பொலிஸ்காரர் பிடிச்ச ஆக்களை, பொறுப்பெடுத்து இஞ்ச கூட்டிக்கொண்டு வாற வேலையை மட்டும்தான் ஒலுகல்ல செய்தவரே தவிர, சிங்கம் சூர்யா மாதிரி பாதாளக்கும்பல் பதுங்கியிருந்த இடத்தை இவர் மோப்பம் பிடிக்கவுமில்லை. அவையை இவர் போய் கைதுசெய்யவுமில்லை.

அதைமாதிரித்தான் நேபாளத்திலையும் நடந்திருக்குது. நேபாளப் பொலிஸ்காரருக்கு இன்ரர்போல் பொலிஸ்காரர் செவ்வந்தியைப் பற்றின விவரங்களைக் குடுத்து அவசரமாத் தேடச்சொல்லி இருக்கினம். அவையும் புதிசா ஆரும் இலங்கை, இந்திய ஆக்கள் வந்திருக்கினமோ எண்டு தேடேக்கதான் செவ்வந்தியைக் கண்டுபிடிச்சு, அப்பிடிக் கூண்டோட பிடிச்சவை. இந்தமுறையும், கூண்டுக்க அடைபட்ட செவ்வந்தியை அலுங்காமல் குலுங்காமல் இஞ்ச கொண்டுவாற வேலையை மட்டும் தான் றொஹான் ஒலுகல்ல பார்த்தவர். அதோட 'இவாதான் செவ்வந்தி'எண்டு பிடிபட்டிருந்த செவ்வந்தியை அடையாளமும் காட்டினவர். இதைத்தவிர அவர் வேற ஒரு ஆணியையும் பிடுங்கேலை. ஆனால் இப்ப அவரை பேமஸாக்கி, கெதியில அவரைப் பொலிஸ்மா அதிபராக்கத்தான் இப்பிடியெல்லாம் ஒலுகல்ல நல்லவர்,வல்லவர் எண்டு அரசாங்கமே புளுகித் தள்ளுதாம் கண்டியளோ.

padsi@uthayan.com
-பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பிற்பகலுக்குமேல் நண்பர்கள்மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும்.

**இடபம்:** பிற்பகலுக்குமேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு செரிமானப் பிரச்சினைகள் ஏற்படும் என்பதால், உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**மிதுனம்:** பிள்ளைகளின் உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன்- மனைவிக்கிடையே சிறு பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவுசெய்யநேரிடும் என்பதால், கையிருப்புக் கரையும். வாழ்க்கைத்துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்குத் திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். பிள்ளைகள் வழியில் தேவையற்ற சில பிரச்சினைகள் ஏற்பட்டு சங்கடம் தரக்கூடும்.

**தனுசு:** சகோதரர்கள்வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். சிலருக்குத் திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.


**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தாய்வழி உறவுகளுக்காக செலவுச் செய்யவேண்டி இருக்கும் கணவன்-மனைவிக்கிடையே வீண்விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

# சௌபாக்கியத்தை அள்ளித்தரும் கேதாரகௌரி விரதம்

மதுரகவி. காரை.எம். பி.அருளானந்தன்



உலக மாதாவாகிய சக்தி, சிவபெருமானை நோக்கிப் அனுஷ்டித்து வாம பாகத்தைப் பெற்ற கேதாரகௌரி விரதம் புரட்டாதி மாதப் பூர்வபக்க அட்டமியில் ஆரம்பித்து ஐப்பசி மாதத்து அபரபக்கச் சதுர்த்தியில் நிறைவுபெறும்.

### சக்தி சிவனை அடைய அனுஷ்டித்த விரதம்

உலக மாதாவாகிய சக்தி சிவபெருமானை நோக்கிச் சிவபூசை செய்து இந்த விரதத்தை நோற்றுப் பெரும் பேற்றினை அடைந்தாள். நினைத்ததைத் தருகின்ற சக்தி விரதங்களுள் மகிமை வாய்ந்த விரதம் கேதார கௌரி விரதமாகும். சிவபெருமானை நோக்கி விரதம் மேற்கொண்ட பார்வதிதேவி சிவபெருமானின் இடப்பாகத்தைப் பெற்றார். அதனால் இறைவன் அர்த்த நாரீஸ்வரர் ஆனார் என்று கூறப்படுகின்றது.

### இருபத்தொரு தினங்கள் அனுஷ்டிக்கும் விரதம்

இருபத்தொரு தினங்கள் சக்தியை நினைத்து அனுஷ்டிக்கப்படும் விரதமாகும். இந்த விரதத்தை இருபத்தொரு தினங்களும் அனுஷ்டிக்க இயலாதவர்கள் சதுர்த்தி தினத்திலாவது கேதாரநாதரை வேண்டி அனுஷ்டிக்கலாம்.

### பிருங்கி முனிவர் பெற்ற சாபம்

இந்த விரத மகிமையை நோக்குகின்றபொழுது சர்வமும் சிவமயமே என்ற கொள்கையுடையவர் பிருங்கி எனும் நாமத்தையுடைய முனிவர். இவர் திருக்கைலாயத்திலே சிவனை வழிபடுவதற்காகச் சென்றிருந்தவேளை அங்கே சிவன் தனித்திருக்காது பார்வதி பரமேஸ்வரராகக் காட்சியளிப்பதைக் கண்டார். சிவனை மட்டும் எப்பொழுதும் வணங்கிவரும் பிருங்கி முனிவர், வண்டுருத் தாங்கி பரமேஸ்வரனை மாத்திரம் வலம் வந்து பிரதட்சணம் செய்தார். அம்பாளைத் தவிர்த்துவிட்டார். முப்பத்து முக்கோடி தேவர்களும், அம்மை அப்பர் இருவரையும் வலம்வந்து வணங்கி நின்றமையும் உலக மாதாவாகிய பார்வதிதேவியைப் புறக்கணித்தமையையும் அம்மையை ஆத்திரங்கொள்ளச்செய்தன. இதனால் பார்வதிதேவியானவள் பிருங்கி முனிவரைச் சக்தியற்றவராகவும், ஆற்றலில்லாதவராகவும் ஆக்கிவிட்டார். ஆற்றலை இழந்த முனிவர் மூர்ச்சையானார். முனிவர் மூர்ச்சை தெளிந்ததும் இறைவனே ஊன்றுகோல் கொடுத்து அவரை இருப்பிடம் சேர்த்தார்.

### "கேதாரீஸ்வரர் விரதத்தை முறையாக அனுஷ்டித்த பார்வதி"

பார்வதிதேவியார் இவற்றையெல்லாம் கண்ணுற்று தாம் வேறுவேறாக அன்றி இறைவனின் இடப் பாகத்தில் ஒரேவடிவில் இருந்தால் இத்தகைய நிலைமை வந்திருக்காது என்பதை உணர்ந்து பூலோகம் சென்று சிவபெருமானின் உடலில் வாம பாகத்தை வேண்டித் தவம் இருந்தார். கௌதம முனிவரின் ஆலோசனைப்படி உமையம்மையார் சிறந்த விரதமாகிய கேதாரீஸ்வரன் விரதத்தை முறையாக அனுஷ்டித்தார். பரமசிவன் எழுந்தருளி உமையம்மையைத் தமது வாம பாகத்தில் அமர்த்திக்கொண்டார். இறைவன் அர்த்த நாரீஸ்வரர் ஆயினார். பாதி ஆண், பாதி பெண் ஆகவுள்ள சிவ மூர்த்தமே அர்த்த நாரீஸ்வரர் வடிவமாகும்.

### இறைவனிடம் இறைவி செய்த விண்ணப்பம்

அப்பொழுது இறைவி, இறைவனை நோக்கி இந்த விரதத்தை முறைப்படி அனுஷ்டிப்பவர் நீண்ட ஆயுளையும், சற்புத்திரப் பேற்றையும், சகல செல்வங்களையும், குடும்ப சுகங்களையும் இம்மையில் பெற்று இறுதியில் தேவரீர் திருவடித் தாமரைகளையும் அடைவதற்குத் திருவருள் புரியவேண்டும் என வேண்டினார். இறைவனும் அவ்வாறு அனுக்கிரகம் செய்து தேவியோடு அர்த்த நாரீஸ்வரராகத் திருக்கைலாயத்துக்கு எழுந்தருளினார். பிருங்கி முனிவரும் சிவனும் சக்தியும் ஒன்றென உணர்ந்து பழைய உருவைப் பெற்றார். சிவமும் சக்தியும் ஒன்றென உலகத்தவர்களுக்குக் காட்டவே இந்தத் திருவிளையாடல் நடந்தது.

### குடும்பநலன் காக்கும் விரதம்

குடும்பத்தில் கணவனும் மனைவியும் கருத்தொருமித்து நல்வாழ்வு வாழவேண்டியே கேதாரகௌரி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. அடுத்து திருமணமாகாத கன்னிப்பெண்களும் தமக்கொரு நல்ல கணவன் கிடைக்க வேண்டுமென நினைத்து அனுஷ்டித்தால் திருமணம் நிறைவேறுகிறது. குடும்பம் சீரோடும், சிறப்போடும், செழிப்போடும், சுகத்தோடும், அமைதியுடனும் திகழ கேதாரகௌரி விரதம் அனுஷ்டிப்பது சிறந்தது.

# அடிப்படை வசதிகளற்று பேசாலை மருத்துவமனை!



மன்னார், ஒக்.21

மன்னார் - பேசாலைப் பிரதேச மருத்துவமனை அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் குறைபாடுகளுடன் இயங்கிவருவதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகப் பிரதேசமக்கள் சுட்டிக்காட்டிக் காட்டியுள்ளனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், மருத்துவமனைக்குச் சென்று மருத்துவமனையின் குறைபாடுகள் குறித்து ஆராய்ந்த போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

பேசாலைப் பிரதேச மருத்துவமனையில் குடி தண்ணீர் வசதியின்மை, ஆண் மற்றும் பெண் நோயாளர் விடுதிகளுக்கான மலசலகூட வசதியின்மை, நோயாளர் விடுதிகளுக்கான குளியலறை வசதியின்மை, மருத்துவமனைக்கான சீரான வடிகாலமைப்பு இன்மை, காவலாளிக்கான தங்குமிட வசதியின்மை உள்ளிட்ட குறைபாடுகள் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக்கொண்டுசெல்லப்பட்டது. இதுதொடர்பில் உரிய இடங்களுக்குத் தெரியப்படுத்திக் குறைபாடுகளுக்குத் தீர்வுகாண தம்மால் கவனஞ்செலுத்தப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார். (ச-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## மண்ணுக்குள் புதையுண்ட உண்மைகள்

வடமராட்சியின், வல்வெட்டித்துறை மண் மீண்டும் ஒருமுறை இரத்தத்தில் தோய்ந்த வலி நிரம்பிய குரலை எழுப்பியிருக்கிறது. மூன்று தசாப்தங்களாக மௌனமாகக் கிடந்த, பொது வெளியில் அதிகம் தெரிந்திராத ஒரு பயங்கரத்தை இப்போது வெளிப்படுத்தியிருக்கிறார் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் செயலாளரான வல்வை ந.அனந்தராஜ். இந்திய அமைதி காக்கும் படையினரால் பிடிக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட பத்துச் சிறுவர்கள்,உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வளாகத்திலேயே கொன்று புதைக்கப்பட்டிருக்கலாம் என்பதே அவர் வெளியிட்ட- இதுவரைகாலமும் இருண்மைக்குள் புதைந்திருந்த- அந்த அதிர்ச்சிகரமான கோரச்சம்பவம்.

இந்தச் சம்பவத்தின் கண்கண்ட சாட்சியமாக அனந்தராஜ் இருக்கிறார். அவரும் இந்தியப் படைகளால் பிடிக்கப்பட்டு, குறித்த பாடசாலையில் தடுத்துவைக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்ட சமகாலத்தில், இன்னொரு கட்டடத்தில் 10 சிறுவர்கள் இந்தியப்படைகளால் பிடிக்கப்பட்டு, தாக்கப்பட்டுள்ளனர். ஆனால் பின்னர் அவர்களின் அழுகுரல் கேட்கவில்லை. சுற்றிவர இந்திய அமைதிப்படைகள் வல்லூறுகள் போல காவலிருக்கும் அந்தப் பாடசாலையில் இருந்து அந்தச் சிறுவர்கள் தப்பியோடவும் முடியாது. அந்தச் சிறுவர்கள் பின்னொருபோதும் வீடு திரும்பவுமில்லை. காணாமல் ஆக்கப்பட்டோராக அவர்கள் மாறினர். இந்தச் சம்பவத்தில் காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்கள் பாடசாலையில் இருந்து தப்பியோடி விட்டனர் என்று பொய்யான கடிதமொன்றில் கையெழுத்திடுமாறு, இந்தியப்படைகளால் அனந்தராஜ் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார். அப்படியானால் அவர்களைக் கொன்றுபுதைத்துவிட்டு, தப்பியோடிவிட்டனர் என்று வெளியுலகுக்குக் காட்ட இந்தியப்படை நாடகமாடவே இப்படியொரு கையெழுத்தைக் கோரியிருக்கிறது.

இப்போது கேள்வி என்னவென்றால், அந்த 10 சிறுவர்கள் மட்டும் தான் அங்கே புதைக்கப்பட்டிருக்கிறார்களா அல்லது இன்னும் பலரும் அப்படி இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டார்களா என்பதே. இதனைக் கண்டறியவேண்டுமென்றும், குறித்த பாடசாலையில் மனிதப்புதைகுழி இருக்கின்றதா என்பதை உரிய ஆய்வுகள்மூலம் கண்டுபிடிக்குமாறும் அனந்தராஜ் கோரிக்கை விடுத்திருக்கிறார். இந்தக் கோரிக்கை வெறும் கடந்தகால வலியைக் கிளறுவதை நோக்கமாகக் கொண்டதல்ல. மாறாக, மறைக்கப்பட்ட நீதியின் கதவுகளைத் திறக்கவேண்டும் என்ற மனித நேயமான வேண்டுகோளாகும்.

வல்வெட்டித்துறை மக்களின் சார்பில் விடுக்கப்பட்டுள்ள இந்தக் கோரிக்கை, அவர்கள் இழந்த குழந்தைகளின் குரலாகவும் ஒலிக்கின்றது. எனவே அதை அரசாங்கமும் உலகமும் காதுகொடுத்துக் கேட்கவேண்டிய நேரம் இது. மண்ணுக்குள் புதைக்கப்பட்ட உண்மைமீது வெளிச்சம் பரவட்டும். நீதியின் ஒளி வெளிப்பட்டால்தான் நல்லிணக்கத்துக்கான அர்த்தம் முழுமைபெறும்



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




**நாளொரு நல்வார்த்தை**

உண்மை மனிதனுக்குச் சொந்தம்.
பிழை அவன் காலத்திற்குச் சொந்தம்.

– கதே –




## இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க நடவடிக்கை




கொழும்பு, ஒக்.21

**ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக்கொண்டு பழங்கள் மற்றும் காய்கறிகளின் இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த இலங்கை முடிவு செய்துள்ளது என்று கூறப்படுகிறது.**

உலகளாவிய நிலையான வளர்ச்சி நிகழ்ச்சிநிரலின் ஒரு பகுதியாக, விவசாயப்பொருள்களைத் தமது சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் மற்றும் தனியார், நிலைத்தன்மை தரநிலைகளுக்கு இணங்கவேண்டும் என்று கோரும் புதிய சட்டங்களை ஐரோப்பிய ஒன்றியம் நடைமுறைப்படுத்தத் தயாராகிவருகிறது.
இந்தச் சட்டங்கள் நடைமுறைக்கு வந்தவுடன், இலங்கை போன்ற நாடுகள் தங்கள் சந்தை அணுகலைப் பராமரிக்கவும் விரிவுபடுத்தவும் இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களையே அதிகம் நம்பியிருக்கும் நிலை ஏற்படும். இலங்கையில் தற்போது சுமார் 20 ஆயிரம் விவசாயிகள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக சுமார் 70 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் இயற்கை முறையில் பயிர்ச் செய்கையை மேற்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## அதிக ஆண்களுக்கு வாய்ப்புற்றுநோய்

கொழும்பு, ஒக்.21
இலங்கையில் ஆண்கள் அதிகம் வாய்ப்புற்றுநோய்க்கு முகங்கொடுக்கின்றனர் என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
பாடசாலை மாணவர்கள் மற்றும் வயது வந்தவர்கள் பல் நோய்களால் பாதிக்கப்படுவது அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த நிலைமைகளிலிருந்து குழந்தைகள் மற்றும் மக்களைப் பாதுகாக்கவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் சுகாதார கல்வித் திட்டங்களைச் செயற்படுத்தவேண்டும் நாட்டில் ஆண்களிடையேவாய்ப்புற்றுநோய் பெரும் பிரச்சினையாக உள்ளது. வாய்ப்புற்றுநோயைத் தடுப்பதற்கு முற்கூட்டியே கண்டறிவது அவசியம்-என்றார். (எ-இ)



## ரயில் சேவைகள் வழமைக்கு

கொழும்பு, ஒக்.21
களனிவெளிப் பாதையின் தொடருந்து சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன என்று ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது. கொஸ்கம மற்றும்அவிசாவளைக்கு இடையில் ரயிலொன்று தடம்புரண்டதால், களனிவெளி ரயில் மார்க்கத்தில் சேவைகள் நேற்று முன்தினம் பாதிக்கப்பட்டன. நேற்று அவை வழமைக்குத் திரும்பின. (எ-இ)

## வாகன முன்பதிவுகள் கடந்த மாதம் உயர்வு

இலங்கையில் கடந்த மாதம் வாகன முன்பதிவுகள் உயர்வடைந்துள்ளன என்று கொழும்பைத் தளமாகக்கொண்ட தனியார் நிறுவனமொன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் செப்ரெம்பர் மாதம் வாகன முன்பதிவுகள் 27 வீத அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளன என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-இ)


## டெங்குத் தொற்றால் 40,000 பேர் பாதிப்பு

கொழும்பு,ஒக்.21
நாடளாவிய ரீதியில் இதுவரையான காலப்பகுதியில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைமை மேலும் தீவிரமடையும் என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப்பிரிவு எச்சரித்துள்ளது. இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 40 ஆயிரத்து 461 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 22 பேர் உயிரிழந்துள்ளனர். டெங்குப் பரவலின் அதிகரிப்பைக் கருத்திற்கொண்டு 7 சுகாதார மருத்துவ அதிகாரப்பிரிவுகள் அதி உயர் டெங்கு அபாயம்மிக்க பகுதிகளாகவும், 183 குறிப்பிடத்தக்களவு டெங்கு அபாயம் மிக்க பகுதிகளாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் தொற்றாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது. எனவே பொதுமக்கள் தாம் வாழும் சூழலில், டெங்கு நுளம்புகள் பெருக்கக்கூடிய பகுதிகளை இனங்கண்டு அவற்றை இல்லாதொழித்து சுற்றுச்சூழலைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் டெங்குக் கட்டுப்பாட்டுப்பிரிவு அறிவித்துள்ளது. (க-இ)

**நாளை** 22.10.2025
புதன்கிழமை - ஐப்பசி 5
சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 03.02 - 04.32


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றக்குழுக்களோடு உறவாடும் பொலிஸாரைக் கண்டறியத்திட்டம்




**கொழும்பு,ஒக்.21**

**பொலிஸ் திணைக்களத்தில் உயர்பதவிகள் முதல் கடைநிலைப் பதவிகள் வரை பல்வேறு பதவிகளில் உள்ளவர்கள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுக்களுடன் தொடர்புகளைப் பேணிவருகின்றமை தொடர்பில், ஆராய்வதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.**


இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு பொலிஸ் விசேட புலனாய்வுப்பிரிவின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபரின் நேரடி மேற்பார்வையின்கீழ் செயற்படும் விசேட புலனாய்வுப் பிரிவு, பொலிஸ் அதிகாரிகளின் உள்ளக நடத்தை மற்றும் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்து வருகின்றது. இந்தப் பிரிவிலுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை தற்போது குறைவாக இருப்பதால் விசாரணைகள் தாமதமடைந்துள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது. ஆகையால் இந்தப் பிரிவுக்குக் கூடுதல் அதிகாரிகளை நியமித்து, புலனாய்வு அமைப்புகளுடன் நேரடித் தொடர்பு கொள்வதற்குத் தேவையான அதிகாரங்களை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (க-இ)

## மதுவரி உத்தியோகத்தர்களில் 20 வீதமானோர் மோசடியாளர்

கொழும்பு,ஒக்.21

மதுவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களில் 20 முதல் 30 வீதமானோர் மோசடியாளர்கள் என்று இலங்கை மதுவரித்திணைக்கள ஆணையாளர் என்.எச்.பிரேமரத்ன தெரிவித்துள்ளார். மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின் 74 ஆவது வருடாந்த மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-நாட்டின் தேசிய பொருளாதாரம் மற்றும் அரச வருமானத்தை ஈட்டித்தரும் துறைகளில் மதுவரித் திணைக்களம் முக்கியமான பங்குவகிக்கின்றது. நடப்பாண்டில் 242 மில்லியன் ரூபா என்ற இலாப இலக்கை மதுவரித் திணைக்களம் அடைந்துள்ளது. இந்த இலாபத்தை மேலும் அதிகரித்துக்கொள்ளமுடியும். சட்டவிரோத மதுபான உற்பத்திகளைத் தடுப்பது மற்றும் அனுமதி பெற்ற மதுபான நிலையங்களிடம் இருந்து வரிகளைப் பெறுவது திணைக்களத்தின் பிரதான பணி. எனினும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கடந்த காலங்களில் எவ்வாறு செயற்பட்டார்களோ அவ்வாறே தற்போதும் செயற்பட்டுவருகின்றனர். இந்தப் பழைமையான பழக்கத்தை இவர்கள் மாற்றிக் கொள்ளவேண்டும்-என்றார். (க-இ)



## தொட்டிக்குள் வீழ்ந்து இளைஞர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக்.21

முந்தல் பொலிஸ் பிரிவின் பத்துலுஓயா பிரதேசத்தில் இறால் பண்ணை ஒன்றின் தண்ணீர்த் தொட்டிக்குள் வீழ்ந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வவுனியாவைச் சேர்ந்த 24 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இறந்தவர் வலிப்பு நோயால் தண்ணீர்த் தொட்டிக்குள் வீழ்ந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் நம்பப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (எ-இ)

## புதையல் தேடியோர் கைது

கொழும்பு, ஒக்.21

நிக்கரவெரட்டிய பொலிஸ் பிரிவில் தனியார் காணி ஒன்றில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. (எ-இ)




## தென்மாகாணத்தில் நேற்றுமுதல் GovPay

கொழும்பு, ஒக்.21

தென்மாகாணத்தில் நேற்று முதல் GovPay செயலி மூலம் நேரடியாகத் தண்டம் செலுத்த முடியும் என்றும், இந்த வசதி அடுத்த மாதம் வடக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த ஆண்டு இறுதிக்குள் 9 மாகாணங்களையும், இந்த திட்டத்துக்குள் உள்ளடக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. GovPay செயலி மூலம் தொலைபேசி அல்லது பிற சாதனத்தைப் பயன்படுத்தி எந்த இடத்திலிருந்தும் எளிதாகப் பணம் செலுத்த முடியும். (எ)

## நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வு

கொழும்பு, ஒக்.21

நாட்டில் கடந்த சில நாள்களாக பெய்துவரும் பலத்த மழை காரணமாக, நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்துள்ளது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. மஹா ஓயா மற்றும் தெதுரு ஓயா வெள்ள அபாயத்தை எட்டியுள்ளன.

ராஜாங்கனை நீர்த்தேக்கத்திலிருந்து தற்போது வினாடிக்கு 8 ஆயிரத்து 870 கன அடி நீர் வெளியேற்றப்படுகின்றது.

வானிலை முன்னறிவிப்புகளின் படி, எதிர்வரும் நாள்களில் கணிசமான மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதால், களுஓயா, மஹா ஓயா, தெதுரு ஓயா, கலா ஓயா போன்ற ஆற்றுப்படுகைகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்றும் திணைக்களம் எச்சரித்துள்ளது. (க-இ)

## சீரற்ற வானிலையால் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக்.21

நாடளாவிய ரீதியில் நிலவும் கடும் மழையுடன் கூடிய வானிலை காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 512 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கடும் மழையுடன் கூடிய வானிலை காரணமாக 123 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. குருநாகல், அநுராதபுரம் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் அதிக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அதேவேளை, 111 வீடுகள் சேதமடைந்துள்ளன. பல குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## 9 கிலோ குஷ் போதைப்பொருளுடன் இளைஞர் கைது

கொழும்பு குற்றப்பிரிவுப் பொலிஸார் நடத்திய சோதனையில், 9 கிலோ 555 கிராம் குஷ்போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 27 வயது இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவில் உள்ள சிறிமுத்து உயன வீட்டுவசதி வளாகத்துக்கு அருகில் நேற்றுமுன் தினம் பிற்பகல் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக கொழும்பு குற்றப்பிரிவுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

## இஷாராவிடம் தீவிர விசாரணை வெளியேவரும் புதிய தகவல்கள்

நேபாளத்தில் கைதுசெய்யப்பட்டு, நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட சந்தேகநபர்களிடம் தற்போது தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த சில நாள்களாக விசாரணைக்காக இஷாரா செவ்வந்தி அளுத்கம, தொடந்துவ, மித்தெனிய உள்ளிட்ட பல பகுதிகளுக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளார். அவர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சிப் பகுதிக்கு அழைத்துச்செல்லப்பட்டார் என்றும் கூறப்படுகின்றது.

அதேவேளை, இஷாராவுடன் கைது செய்யப்பட்ட தக் ஷி என்ற பெண்ணை ஏமாற்றியே நேபாளத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர் என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன. கெஹெல் பத்தர பத்மேவின் ஆலோசனைக்கு அமைய இஷாராவின் தோற்றத்தை ஒத்த யுவதி ஒருவரைத் தேடும்பணியில் சுரேஷ் என்பவர் ஈடுபட்டபோதே தக்ஷியை அவர்கள் சந்தித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. தக்ஷிக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறியே நேபாளம் அழைத்துச்சென்றுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் வீழ்ந்து நொருங்கிய சரக்கு விமானம்

பீஜிங், ஒக்.21

சீனாவில் உள்ள ஹொங்கொங் சர்வதேச விமானநிலையத்தில் நேற்று அதிகாலை சரக்கு விமானம் ஒன்று தரையிறங்கும்போது விபத்துக்குள்ளாகி கடலில் விழுந்து நொருங்கியதில், விமானநிலைய ஊழியர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டுபாயில் இருந்து சென்ற போயிங் 747 ரக சரக்கு விமானம், உள்ளூர் நேரப்படி அதிகாலை 3:50 மணியளவில் தரையிறங்கியபோது, ஓடுபாதையில் இருந்து விலகி கடலில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஓடுபாதையில் இருந்து விலகிய சரக்கு விமானம், விமான நிலையத்தின் பாதுகாப்பு ரோந்து வாகனத்துடன் மோதி, அந்த வாகனத்தையும் கடலுக்குள் தள்ளியது. இந்த விபத்தில் வாகனத்தில் இருந்த விமானநிலையப் பாதுகாப்பு ஊழியர்கள் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். விமானத்தில் இருந்த நான்கு விமானிகள் பத்திரமாக மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (எ-இ)




## 38 ஆம் ஆண்டு நினைவு தினம்



இந்திய இராணுவத்தினரால்,
யாழ் போதனா வைத்தியசாலை
மீது நடத்தப்பட்ட தாக்குதலில்
அன்புலன்ஸ் சாரதியான

**அமரர் வைத்திலிங்கம் சண்முகலிங்கம்**

உள்ளிட்ட 21 பேர் படுகொலை செய்யப்பட்டு 38 ஆம் ஆண்டு நினைவு தினமான இன்று அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 31.12.1939 மறைவு 21.10.1987
திதி: சதுர்த்தசி

திருமதி சண்முகலிங்கம்
குடும்பத்தினர்.
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(CS/ 59688) J-1

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 16.10.1942



உதிர்வு 21.10.2024

**அமரர் பொனிப்பாஸ் மெற்றிலம்மா**

எங்கள் அன்பு அம்மா! ஆண்டு ஒன்று ஆனாலும்
உங்கள் அன்பு முகத்தையும் புன்னகையும் எல்லோரையும்
அரவணைக்கும் பண்பையும் எப்படி நாம் மறப்பது.

நொடிப் பொழுதில் எங்களை வருந்த விட்டுச் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் நீங்காது

எம் இதயத்தின் ஆழத்தில் என்றும்
உங்கள் நீங்கா நினைவலைகளுடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

உங்கள் ஆன்மா நித்தியத்திற்கும்
இறைவனில் இளைப்பாறிட மன்றாடுகிறோம்

சென்மேரிஸ் 1ம் ஒழுங்கை
கொழும்புத்துறை

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS 59680) E

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 04.06.1939



ஆண்டவன் அடியில் 18.10.2025

**திருமதி புலோமிசை அருளம்பலம் (தயாம்மா)**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட 'தயாம்மா' என்று அன்பாக அழைக்கப்பட்ட திருமதி புலோமிசை அருளம்பலம் அவர்கள் 18 ஆம் திகதி சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தங்கம்மா தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற அருளம்பலம் (MLT) அவர்களின் பாசமிகு துணைவியாரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் பரஞ்சோதியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ரோகிணியம்மா, தனபாலரட்ணம் (அன்பு வைத்தியர்), இராஜசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் தணிகை (U.K) அம்பிகை (Canada), காலஞ்சென்ற சபேசன் மற்றும் வனிதை (U.K) இராதை (உடற்கல்வி அலகு, யாழ். பல்கலைக்கழகம்) விக்னேசன் (U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும், போதரட்ணம் (U.K), கருணாகரன் (U.K), அபிராமி (UK) ஆகியோரின் மாமியாரும், அரூபன், பாரீசன், பிறையவன், தர்சன், கீர்த்தனா, கனிக்கா, ஹாசினி, ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 21 ஆம் திகதி செவ்வாய்கிழமை, இல. 458, கண்டி வீதி, அரியாலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் : குடும்பத்தினர்
இராதை அருளம்பலம் (மகள்) - 077 791 7731

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 27.09.1951



மறைவு 19.10.2025

**திருமதி நடராஜா ஆச்சாரி அன்னலெட்சுமி**

இரத்தினபுரியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் நல்லூரடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா ஆச்சாரி அன்னலெட்சுமி அவர்கள் 19.10.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னார் வையாபுரி நடராஜா ஆச்சாரி அவர்களின் பாசமிகு மனைவியும் ஆவார்.

காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், அங்கம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வையாபுரி, காந்திமதி ஆகியோரின் பாசமிகு மருமகளும், அமரர் மகாலிங்கம் ஆச்சாரி, அமரர் பொன்னம்மா, அமரர் இலட்சுமணன் ஆச்சாரி, இராமலிங்கம் ஆச்சாரி, அழகம்மாள் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

திருமதி ஜெயந்தி, ஸ்ரீநாத், ஜெயந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஷ்ணமூர்த்தி (Swisso), சோபிகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார். மாதங்கி, யதுஷா, ஸ்ரீகரிஸ், ஸ்ரீநிதேஸ் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2025) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்
தொலை: 077 791 7579

(CS 4229) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் விசுவாவசு வருடம் புரட்டாதி மாதம் 27ம் நாள் (13.10.2025) திங்கட்கிழமை மாலை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### சபாரெத்தினம் சர்மா கருணானந்தசர்மா

அவர்களின் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 22.10.2025 | புதன்கிழமை | முற்பகல் | 10.00 மணி | தசாகம் |
| 23.10.2025 | வியாழக்கிழமை | முற்பகல் | 10.00 மணி | ஏகோதிஷ்டம், மாஷிமம் |
| 24.10.2025 | வெள்ளிக்கிழமை | முற்பகல் | 10.30 மணி | சபிண்டீகரணம் |
| 25.10.2025 | சனிக்கிழமை | நண்பகல் | 11.00 மணி | கிருஹயக்ஷம் |
| | | பகல் | 12.00 மணி | மதியபோசனம் |

மேற்படி தினங்களில் நடைபெறும் கிரியைகளிலும் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் சமாராதனையிலும் (மதியபோசனத்திலும்) கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

2ம் ஒழுங்கை, நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.
021 2255 561, 0777 159 735


# போர்நிறுத்தத்தை மீறியது இஸ்ரேல்

## ஹமாஸ் குற்றச்சாட்டு

## உதவிகளை நிறுத்திய இஸ்ரேல்

போர்நிறுத்தத்தை இஸ்ரேல் அப்பட்டமாக மீறியுள்ளது என்று ஹமாஸின் மூத்த உறுப்பினர் இஸ்ஸாத் அல் ரிஷ்க் குற்றஞ் சாட்டியுள்ளார். கட்டார் மற்றும் எகிப்து தலைமையிலான மத்தியஸ்த முயற்சிகளையும் தடம் புரளச்செய்யும் முயற்சியை இஸ்ரேல் முன்னெடுத்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை, காஸாவுக்கு உதவிப்பொருள்கள் கொண்டுசெல்லப்படுவதை இஸ்ரேல் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. ஹமாஸ் ஒப்பந்தத்தை வெளிப்படையாக மீறியதைத் தொடர்ந்து, அரசியல் பிரிவுகளின் உத்தரவுப்படி, காஸாவுக்கு மனிதாபிமான உதவிகள் அனுப்புவது மறுஅறிவிப்பு வரும் வரை நிறுத்தப்பட்டுள்ளது என்று இஸ்ரேலின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# இஸ்ரேலின் தாக்குதலில் 18 பேர் பலி

போர்நிறுத்த உடன்படிக்கை எட்டப்பட்ட பின்னர் காஸாமீது இஸ்ரேல் நடத்திய வான்தாக்குதலில் 18 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த சனிக்கிழமை முதல் காஸா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை ஆரம்பித்துள்ளது.

காஸாவின் பல இடங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் பெண் ஒருவர் உட்பட 18 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தெற்குக்காஸாவின்கிழக்கு கான் யூனிஸில் குறைந்தது 12 வான்வழித் தாக்குதல்கள் நடந்தன எனக் கூறப்படுகிறது. (எ-இ)


## பெண் பணியாளர் தேவை

நோயிலிருந்து குணமாகும் பெண் (61 வயது) ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிக்க பெண் பணியாளர் தேவை.

**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**071 847 5539**

(CS 4250) A



## மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 11 . 1967



மறைவு
19 . 10 . 2025

### செந்தில்நாதன் பரஞ்சோதிமலர்

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவம் மாயவனூர் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட செந்தில்நாதன் பரஞ்சோதி மலர் கடந்த 19.10.2025 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கரைச்சி கிழக்கு ப.நோ.கூ சங்க முகாமையாளர் செந்தில்நாதன் (செந்தில் மனேஜர்) அவர்களின் அன்புத் துணைவியும், சங்கரப்பிள்ளை - விமலாதேவி தம்பதியரின் அன்பு மகளும், கிருஸ்ணபிள்ளை - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், பார்த்தீபன் அவர்களின் அன்புச் சகோதரியும், சிந்தூஜா (பிரான்ஸ்), மதுஜா (ஆசிரியை செல்லியாதீவு அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், டிலக்சன் (பிரான்ஸ்), அனுராஜ் (கணக்காளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சூரியகுமாரி, நகுலாம்பிகை, ஸ்ரீகணநாதன், ஞானசக்தி, ஜெயகௌரி, காலஞ்சென்றவர்களான அருணகிரிநாதன் அருந்ததிதேவி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான யோகராசா, விக்கினேஸ்வரன் மற்றும் அருள், வைரவநாதன் ஆகியோரின் சகலியும், பத்மஸ்ரீ, சாந்தி, உதயசேகன் (சிவன் அம்மை கொம் நெற், தட்டாதெரு, யாழ்ப்பாணம்), சாந்தி ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2025) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியை களுக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 02 . 1948



மறைவு
20 . 10 . 2025

### சுப்பிரமணியம் சக்திவடிவேல்

தொல்புரம் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சக்திவடிவேல் அவர்கள் (20.10.2025) திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், திலகவதி அவர்களின் பாசமிகு கணவரும், யசோதா (கனடா), யுகதேவி (லண்டன்) அமரர் Dr.சக்திபாலன், லோஜினி (பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் தந்தையாரும், சசிதரன் (கனடா), ஜெயசீலன் (லண்டன்), துவாரகா (ஆசிரியர் - மன்/டிலாசால் கல்லூரி, நானாட்டான்), தவகுமாரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர்களான கணேசநாதன், செந்தில்செல்வர் மற்றும் விஜயலட்சுமி இராசநாயகம் (ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்ற சத்தியதேவி ஆகியோரின் அன்பு சகோதரரும், ஆகாஸ், அபிலாஸ், அக்ஷயா, ஹரிஸ், ஹரித், சக்திகா, சக்திப்பிரியா, லியாசக்தி, திவ்யன், கபிஷா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 22.10.2025 நாளை புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
மனைவி - 070 653 1622
மருமகன் - 077 653 1622

தகவல்:
குடும்பத்தினர்

(CR 461431) E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போதைப்பொருள் நீர்மூழ்கி அமெ. படைகளால் அழிப்பு

**நியூயோர்க், ஒக்.21**

**கரீபியன் கடற்பகுதியில் போதைப்பொருள் கடத்திய நீர்மூழ்கிக்கப்பல் ஒன்றை அமெரிக்கப்படைகள் தாக்கி அழித்துள்ளன. இந்தச் சம்பவத்தில் போதைப்பொருள் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கொல்லப்பட்டதுடன், இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து கரீபியன் கடல் வழியாக அமெரிக்காவுக்கு அதிவிரைவு படகுகள்மூலம் போதைப்பொருள்கள் கடத்தப்படுகின்றன. கடந்த இரு மாதங்களில் இவ்வாறான 6 அதி விரைவுப் படகுகளை அமெரிக்கப்படைகள் தாக்கி அழித்திருந்தன. இந்தப் படகுகள் வெனிசுவேலாவில் இருந்து வந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

இந்த நிலையில் கரீபியன் கடலில் இரவு நேரத்தில் ஒரு நீர்மூழ்கிக்கப்பல் பாதியளவு நீரில் மூழ்கியவாறு பயணிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அதில் உள்ளவர்களைத் தொடர்புகொள்ளமுடியாத நிலையில், அது ஒரு போதைப்பொருள் கடத்தும் நீர்மூழ்கிக்கப்பல் என்பதை உறுதிப்படுத்திய அமெரிக்கப்படைகள் அதன்மீது தாக்குதல் நடத்தியுள்ளன.

நீர்மூழ்கிக்கப்பலில் பயணித்த இருவர் கொல்லப்பட்டதுடன், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் ஈக்குவடோர் மற்றும் கொலம்பியாவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## Divorce மணப்பெண்கள் தேவை

1. கைதடி. இந்து. 1994. கார்த்திகை. Hons in phychology, canada citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 51091
2. கொக்குவில். இந்து. 1992. அனுஷம். ACCA, BBA, BSc, LLM, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 34763
3. மீசாலை - ஆவரங்கால். இந்து. 1985. சதயம். Technical officer, France citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 34746
4. மூளாய் - மானிப்பாய். இந்து. 1988. Doctrate in finance management, Lecturer, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 43978
5. திருநெல்வேலி. இந்து. 1986. கேட்டை. BSc, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 48612
6. யாழ்ப்பாணம். இந்து. 1982. அத்தம். Masters in Engineering(USA), USA citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 24750
7. மானிப்பாய். இந்து. 1978. உத்தராடம். BSc Hons, Australia citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 33259
8. Colombo, இந்து. 1990. ரோகிணி. HND, HE Manager and Business, France citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 54907
9. இரத்தினபுரி. 1979. இந்து. பூசம். B.Com, PGD, ACCA, Assistant Manager, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 33275
10. ஒட்டுமடம். இந்து. 1985. ரேவதி. Computer Engineering, Manager, Germany citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 31625

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

பேருந்து விபத்துக்குள்ளானதில்

# 17 சுற்றுலாவிகள் உயிரிழப்பு

**லண்டன், ஒக்.21**

பிரேசிலின் வடகிழக்கு மாகாணமான பெர்னாம்புகோவில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச்சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதில் 17 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம், பெர்னாம்புகோ மாகாணத்தின் சலோவா நகருக்கு அருகில் உள்ள நெடுஞ்சாலையில் நடந்துள்ளது. ப்ரூமாடோ நகருக்குச் சுற்றுலா சென்ற சுமார் 30 பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து, திடீரென கட்டுப்பாட்டை இழந்து வீதியின் ஓரத்தில் இருந்த பாறைகளில் மோதி பின்னர் மணல்மேட்டில் மோதி கவிழ்ந்தது. இந்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 15 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று பெர்னாம்புகோ மாகாண அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இருவர் பின்னர் உயிரிழந்துள்ளனர். (எ-இ)



# தெய்வீக இசை அரங்கம்

**யாழ்ப்பாணம், ஒக்.21**

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாகத் தெய்வீக இசை அரங்கம் நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. குறித்த நிகழ்வில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர் பாலச்சந்திரன் யாழினி அணிசெய் கலைஞர்களுடன் இணைந்து தெய்வீகப் பாடல்களைப் பண்ணுடன் இசைத்தார். (க-66)

# நெப்போலியன் கால நகைகள் நூதன முறையில் கொள்ளை!



பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள இலூவா அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த நெப்போலியன் காலத்து நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இந்தக்கொள்ளைச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நடந்துள்ளது.

ஹைட்ராலிக் ஏணியைப் பயன்படுத்தி அருங்காட்சியகத்தில் நுழைந்த கொள்ளையர்கள், அப்போலோ வளாகத்தில் உள்ள பிரெஞ்சு மன்னர்கள் மற்றும் ராணிகள் பயன்படுத்திய 9 கிரீடங்கள் மற்றும் நகைகளைக் கொள்ளையடித்துள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் 7 நிமிடங்களில் முடிந்துள்ளது. நன்கு திட்டமிட்டு இந்தக் கொள்ளைச் சம்பவத்தைக் கொள்ளையர்கள் அரங்கேற்றியுள்ளனர் எனப் பிரான்ஸ் நாட்டின் உள்துறை அமைச்சர் லாரண்ட் நுனஸ் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர். அருங்காட்சியகத்துக்கு ஏற்பட்ட சேதம் மதிப்பீடு செய்யப்பட்டுவருகிறது. கொள்ளைச் சம்பவத்தையடுத்து அருங்காட்சியகம் மூடப்பட்டது. அருங்காட்சியகம் முன்பு தடுப்புகள் அமைக்கப்பட்டன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொழில் முயற்சியாளர் விற்பனைக் கண்காட்சி

கிளிநொச்சி, ஒக்.21
கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் தொழில் முயற்சியாளர் களுக்கான விற்பனைக் கண்காட்சி கிளிநொச்சி பழைய மாவட்ட செயலக வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம் பமாகி இடம்பெற்றது.

சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப்பொருள்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும், அவற்றிற்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும்முகமாகவும் குறித்த விற் பனைக்கண்காட்சி நடத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் பதில் உதவிப்பணிப்பாளர் ச.சசீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கி ணைப்புக்குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் நளாயினி இன்பராஜ், மேலதிக மாவட்டச் செயலர் (காணி) அஜிதா பிரதீபன் ஆகியோர் கலந்துகொண் டனர். (ச-41-113)

# சீருடைகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.21
வலி.தென்மேற்குப் பிரதேசசபை உறுப்பினர் தேவராசா சுதர்சனால் சண்டிலிப்பாய் பாரதி முன்பள்ளி மாணவர் களுக்கு சீருடைகள் கடந்த சனிக்கிழமை கையளிக்கப் பட்டன. பிரதேசசபையால் தனக்கு வழங்கப்படுகின்ற ஊதியத்தை மக்களுக்குரிய நலத்திட்டங்களுக்கே பயன் படுத்துவது என்ற திட்டத்துக்கு அமைவாகவே குறித்த சீருடைகள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-40)









# மாணவர்கள் கௌரவிப்பு

மன்னார், ஒக்.21
2024ஆம் ஆண்டில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் 9ஏ சித்திகளைப் பெற்ற மாண வர்கள் மற்றும் உயர்தரப் பரீட்சையில் 3ஏ சித்திகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு மன்னார் நகர மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற் றது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலை வரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் முயற்சியில், அக்கட்சியின் கல்வி, கலா சாரப் பிரிவினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப் பட்டது. (ச-41-56)

மன்னார் தாழ்வுபாடு புனித ஜோசப் மகாவித்தியாலயத்தில், தகவல் தொழில்நுட்ப ஆய்வகம் கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்பட் டது. கொமர்ஷல் வங்கியின் மன்னார்க் கிளை யின் நிதி உதவியில் இந்த ஆய்வகம் அமைக்கப்பட்டு கையளிக்கப் பட்டது. (சு-56.40)




# கிளிநொச்சியில் முதியோர் தினம்

கிளிநொச்சி, ஒக்.21
வடக்கு மாகாண சமூக சேவை கள் திணைக்களத்தின் ஏற்பாட் டில் சர்வதேச முதியோர் தினம் மற்றும் முதியோ ருக் கான ஆரோக்கிய வாழ்வுக் கான வழிகாட்டல் முகாம் என்பன கிளிநொச்சி கூட்டுற வுக் கலாசார மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றது.

இதன்போது தொற்றாநோய்க ளுக்கான மருத்துவப் பரிசோத னைகள், ஆரோக்கியமான உணவு, தொழில்நுட்பக் கருவி களின் பயன்பாடு, உதவி உபகரணங்கள் வழங்குதல் முதலான செயற்பாடுகள், முதியவர்களின் கலைநிகழ் வுகள் மற்றும் கௌரவிப்பு நிகழ்வுகள் என்பன நடை பெற்றன. (ச-41-113)

சண்டிலிப்பாய் பாரதி முன்பள்ளியின் ஆசி ரியர்தின நிகழ்வும் சிறுவர்தின நிகழ்வும் பாரதி முன்பள்ளியில் கடந்த வெள்ளிக்கி ழமை இடம்பெற்றன. பாரதி விளை யாட் டுக்கழகத் தலைவர் து.சயந்தன் தலைமை யில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்குப் பிரதே சசபை உறுப்பினர் தே.சுதர்சன் கலந்து கொண்டார். (ச-40)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை தாக்கி குடும்பப் பெண் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஒக்.21
வவுணதீவு, வாதகல்மடு கிராமத்தில் காட்டு யானை தாக்கிக் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று இரவு நடந்துள்ளது. உறங்கிக் கொண்டிருந்தபோது வீட்டுக்குள் புகுந்த யானையைக் கண்டு அச்சமடைந்து ஓடிய போது அவர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.
(எ-இ)



# ஊராட்சி முற்றக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக் 21
குடிசார் அமைப்புகளின் மாகாணமட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல் கைதடியில் அமைந்துள்ள வடமாகாணசபை பிரதம செயலாளர் செயலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம செயலாளர் தனுஜா முருகேசன், கிளிநொச்சி குடிசார் அமைப்பின் பிரதிநிதி ஞா.ரஜீவ்கரன், கிறிசலிஸ் நிறுவனத்தின் திட்ட மற்றும் பிராந்திய முகாமையாளர் ம.பிய பாகரன், அரச, அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், ஐந்து மாவட்டங்களின் குடிசார் அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-25, 159)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஊடாக, யாழ். போதனா மருத்துவமனையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்துக்கு இன்சுலின் பேனைகள், மற்றும் மருந்துப் பொருள்கள் கையளிக்கப்பட்டன. இதற்குச் சாவகச்சேரி கோயிற்குடிருப்பைச் சேர்ந்த நலன் விரும்பி நிதிப்பங்களிப்புச் செய்தார். (ச-25-9)

## இசைப்பிரியா...

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் பொன்சேகா மேலும் தெரிவித்ததாவது:-
இறுதிப்போரின்போது 2 இலட்சத்து 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் சரணடைந்தனர். பல்லாயிரக் கணக்கான விடுதலைப் புலிகளும் மக்களுடன் மக்களாகச் சரணடைந்தனர். அவர்களுக்குத் தேவையான உடை, உணவு, மருந்து என்பவற்றை வழங்கி, புனர்வாழ்வில் இருந்து செல்லும்வரை அனைவரையும் முறைப்படி பாதுகாத்தோம்.
எனினும், இறுதிப்போரின் போது இடம்பெற்ற சில விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்பில் இன்றளவும் பெரும் சர்ச்சைகள் நிலவுகின்றன. அவற்றில் ஒன்று இசைப்பிரியாவின் படுகொலை. இசைப்பிரியா படுகொலை செய்யப்பட்ட விடயத்தில், முன்னாள் இராணுவப் பிரதானி கபில ஹெந்தவிதாரணவின் குழுவுக்குத் தொடர்புள்ளது என்று உறுதியாகக் கூறுகின்றேன். இந்த விடயம் தொடர்பில் தீர்க்கமான விசாரணைகள் இடம்பெறவேண்டும்.
அத்துடன், சரணடைந்த சிலரைக் கொலைசெய்த குற்றச்சாட்டு ஜகத் ஜயசூரிய மீதும் காணப்படுகின்றது. இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக நான் இராணுவ விசாரணைகளைக்கூட முன்னெடுத்தேன். விசாரணைகள் இடம்பெறும்போது, இடைநடுவில் நான் பதவி நீக்கப்பட்டு ஜகத் ஜயசூரிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார். அப்போது, ஜகத் ஜயசூரிய மீதான குற்றச்சாட்டுத் தொடர்பில் மஹிந்தவிடம் தெரிவித்தேன். எனினும் அதனைக் கருத்தில் கொள்ளவில்லை.
இராணுவத்தினருக்கு எதிரான விசாரணைகள் தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சர்வதேசத்தில் இருந்தும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதால், சர்வதேச கண்காணிப்பாளர்களின் கீழ் விசாரணைகளை முன்னெடுக்க முடியும். அப்படிச் செய்யும் பட்சத்தில் எமது விசாரணைகள் வெளிப்படைத் தன்மையுடன் அமையும். முறையான சாட்சிகள் இருக்குமாக இருந்தால் நியாயமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை - என்றார்.
இராணுவப் பிரதானியாக இருந்த கபில ஹெந்தவிதாரண பின்னர் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகச் செயற்பட்டார். அவர், முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களின் மூளையாகச் செயற்பட்டார் என்றும் குற்றச்சாட்டுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## நீரிழிவுச்...

ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தின் சேவைகள் தற்போது வெளிநோயாளர் கட்டடத் தொகுதியின் முதலாம் மாடியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இந்த நிலையில், வெளிநோயாளர் மற்றும் விபத்துச் சிகிச்சைக் கட்டடத் தொகுதிகளுக்கு இடையிலான பகுதியில் இரத்தப் பரிசோதனை மாதிரிகளை வழங்கும் பகுதி இடமாற்றம் செய்யப்பட்டு, கடந்த சில தினங்களாகச் செயற்படத் தொடங்கியுள்ளது.
இந்த மாற்றத்தின் மூலம் நோயாளிகளுக்கு ஏற்படும் நெரிசல்கள் குறைக்கப்படுவதுடன் பரிசோதனைகளுக்காக இரத்த மாதிரிகளை வழங்கும் நபர்கள் இலகுவாக குறித்த பகுதியில் தேவையான சேவைகளைப் பெறுவதற்கான சூழல் உருவாகியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம-66)

## மத்திய...

டுள்ளது. உலக வங்கியின் வருடாந்த கூட்டத்தொடருடன் இணைந்த வகையில், குளோபல் பைனான்ஸ் பத்திரிகையால் இந்த விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.
ஆளுநர் நந்தலால் வீரசிங்கவின் விவேகமான பணவியல் கொள்கைகள், நாட்டின் நிதி அமைப்பை நிலைப்படுத்துவதில் அவரது பங்களிப்பு மற்றும் சவாலான உலகளாவிய நிலைமைகளுக்கு மத்தியில் அவரது மூலோபாய மேலாண்மை ஆகியவற்றை அங்கீகரித்து இந்த விருது வழங்கப்படுவதாக குளோபல் பைனான்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.
குளோபல் பைனான்ஸ் பத்திரிகை வருடந்தோறும் நம்பகத்தன்மை, பணவீக்கக் கட்டுப்பாடு, நாணய நிலைத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் அடிப்படையில் மத்திய வங்கி ஆளுநர்களை மதிப்பீடு செய்து விருதுகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## தமிழர்...

துள்ளன. 'ஆட்சியைக் கைப்பற்றினால், ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்' என்பதே அனைத்துத் தரப்பினரின் பொதுவான வாக்குறுதியாகக் காணப்படுகின்றது.
இதையடுத்தே, 'இந்தியாவில் தமிழர் ஒருவர் பிரதமரானால் மட்டுமே ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்' என்று திருமாவளவன் கூறியுள்ளார். (அ-ம)

## கிளிநொச்சியில்...

கிளிநொச்சி அம்பாள்குளம் மற்றும் உதயநகர் பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-113-316)

## யாழ்...

துப்பாக்கிச் சூட்டில், 68 பேர் கொல்லப்பட்டனர். அவர்களின் 38ஆவது நினைவேந்தல் நிகழ்வே இன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது.
இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (அ-ம-66)

## உருவானது...

காற்றழுத்தத் தாழ்வுமையமாக மாற்றம்பெறும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
வங்காள விரிகுடாவில் முன்னறிவிக்கப்பட்டிருந்த தாழமுக்கம் தற்போது உருவாகியுள்ளது. தற்போதை கணிப்புகளின் அடிப்படையில் அது தமிழ் நாட்டின் சென்னைக்கு அருகே கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
இலங்கையின் கிழக்கே உருவாகியுள்ள தாழமுக்க நகர்வு காரணமாக வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. மாதிரிகளின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகள் (பிரதானமாக நகரப் பகுதி), முல்லைத்தீவு மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், மன்னார் மாவட்டம், மற்றும் வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகளில் 80 தொடக்கம் 120 மில்லிமீற்றர் வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது - என்றுள்ளது. (அ-ம-66-26)

## இளைஞர்...

என்ற இளைஞரே இவ்வாறு வெட்டிக் கொல்லப்பட்டவராவார். முன்பகை காரணமாக இந்தப் படுகொலை சம்பவித்துள்ளது என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசபட்டங்களை துறந்தார் அன்றூ!

லண்டன், ஒக்.21

அமெரிக்க பாலியல் குற்றவாளி ஜெப்ரி எப்ஸ்டீனுடன் இருந்த தொடர்பு மற்றும் பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டுகள் காரணமாக பிரிட்டன் மன்னர் சார்ள்ஸின் இளைய சகோதரரான இளவரசர் அன்றூ தனது அரச பட்டங்கள் மற்றும் கௌரவங்களைப் பயன்படுத்துவதைத் துறப்பதாக அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

யோர்க் பிரதேசத்தின் டியூக் என்ற பட்டம் உள்ளிட்ட தனக்கு வழங்கப்பட்ட அனைத்து அரச பட்டங்கள் மற்றும் கௌரவங்களை இனிப் பயன்படுத்தப்போவதில்லை என அன்றூ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மன்னருடனும், குடும்பத்தினருடனும் கலந்துரையாடிய பிறகு, என் மீதான தொடர்ச்சியான குற்றச்சாட்டுகள் மன்னர் மற்றும் அரச குடும்பத்தின் பணிகளுக்கு இடையூறாக உள்ளது என்ற முடிவுக்கு வந்தோம். எனவே, எனது கடமையே பிரதானம் எனக் கருதி, அரச குடும்பத்தின் ஒப்புதலுடன் இந்த முடிவை எடுத்துள்ளேன் என்று அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆயினும் தன் மீதான குற்றச்சாட்டுகளை முற்றிலும் மறுப்பதாகவும் அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். இந்த முடிவு, அன்றூ மீதான அவப்பெயரிலிருந்து அரச குடும்பத்தை மேலும் பாதுகாக்கும் முயற்சியாகக் கருதப்படுகிறது. இளவரசர் அன்றூமீது பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டு சுமத்திய வேர்ஜீனியா கியூப்ரே என்ற பெண் மரணத்துக்கு முன் எழுதிய 'Nobody's Girl' என்ற சுயசரிதை அடுத்த வாரம் வெளியாக உள்ளது. அன்றூவின் இந்த அறிவிப்பு, அவரது சுயசரிதை வெளியாவதற்கு சில நாள்களுக்கு முன்னரே வந்துள்ளது. இந்தப் புத்தகம் அன்றூ மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான மேலும் பல பரபரப்பான தகவல்களை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-இ)

# ஆளணி வளப் பற்றாக்குறையில் வவுனியா கல்வியியற் கல்லூரி!

## திருப்பியனுப்பப்பட்டது ரூ. 38 மில்லியன் நிதி கல்லூரியின் பீடாதிபதி சுட்டிக்காட்டு

**வவுனியா, ஒக்.21**

**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆளணி வெற்றிடங்கள் மற்றும் வளப்பற்றாக்குறைகள் நிறைந்து காணப்படுவதால் பலத்த இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளது. இதனால் வினைத்திறனான முறையில் கல்வியியற் கல்லூரியைக் கொண்டு நடத்த முடியாதநிலை காணப்படுவதாகவும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ஜி.கமலகுமார் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு நேரடியாகச் சென்று கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி மற்றும் விரிவுரையாளர்களுடன் கலந்துரையாடி குறைபாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்தபோது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.**

இந்த வருடம் வவுனியா கல்வியியற் கல்லூரியால் முன்மொழியப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் 64மில்லியன் ரூபா பெறுமதியான 10திருத்த வேலைத்திட்டங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தன.

அவ்வாறு அனுமதிக்கப்பட்ட திருத்த வேலைத்திட்டங்களில் 26மில்லியன் ரூபா பெறுமதியான 4 வேலைத்திட்டங்களே செயற்படுத்தப்படவுள்ளன. ஏனைய திட்டங்களுக்குரிய நிதி திரும்பியுள்ளநிலையில் 6 திருத்தவேலைத் திட்டங்களை செயற்படுத்தமுடியாத துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் 88 ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்விசார் ஆளணி காணப்படுகின்றது. இருப்பினும் தற்போது 68 கல்விசார் ஆளணி குறித்த கல்வியியற் கல்லூரியில் பதிவில் உள்ளபோதும், 15பேர் இணைப்பில் வெளிநிலையங்களில் பணியாற்றுகின்றனர். அதேவேளை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மொத்தம் 91 ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்விசாரா ஊழியர்களின் ஆளணி காணப்படுகின்றபோதும், 35கல்விசாரா ஊழியர்களே கடமையாற்றிவருகின்றனர்.

அத்துடன் காவலாளி, சுகாதாரப்பணியாளர்கள், சமையல் பணியாளர்கள் உள்ளிட்ட பல ஆளணி நியமனங்களில் பற்றாக்குறைகள் காணப்படுகின்றன.

மேலும் சீரான மலசலகூடவசதிகளின்மை, விஞ்ஞான ஆய்வுகூட வசதிப் பற்றாக்குறை, நூலக வசதிப்பற்றாக்குறை, கல்வியியற்கல்லூரியின் கட்டடங்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலை, வடிகாலமைப்புச் சீரின்மை, கல்வியியற் கல்லூரி வளாகத்தில் மின்விளக்குப் பற்றாக்குறை, வகுப்பறைகளில் நவீன கற்றல் கருவிகளின் பற்றாக்குறை, உள்ளக வீதிகள் சீரின்மை, அனர்த்தம் ஏற்படக்கூடியவகையிலான பாதுகாப்பற்ற மின்சார இணைப்புகள் என பல்வேறு உட்கட்டமைப்புக் குறைபாடுகளும் காணப்படுகின்றது. இதனால் கல்வியியற் கல்லூரியின் நிர்வாக நடவடிக்கைகளை சீராகப் பேணுவதில் பாரிய சவால்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை காணப்படுகின்றது என்றும் கல்வியல் கல்லூரியின் பீடாதிபதி நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் எடுத்துரைத்தார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், கல்வியியற்கல்லூரியில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறை, உட்கட்டமைப்பு வசதிகளிலுள்ள குறைபாடுகள் மற்றும் அபிவிருத்தி நிதி திரும்பியமை தொடர்பில் உரிய இடங்களுக்கு கொண்டுசென்று உரிய தீர்வினைப் பெற்றுத்தரத்தான் முயற்சியெடுப்பேன் - என்றார். (ச-246,26)

**தென்மராட்சியில்**

# குரங்குகளைக் கட்டுப்படுத்த துப்பாக்கிகள் கொள்வனவு!

யாழ்ப்பாணம், ஒக்.21

தென்மராட்சியில் குரங்குத் தொல்லையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சபை நிதியிலிருந்து துப்பாக்கிகள் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது தென்மராட்சியில் குரங்குத் தொல்லையினைக்கட்டுப்படுத்தும்நோக்கில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு வாயுத் துப்பாக்கிகளை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை நகராட்சிமன்ற உபதவிசாளர் ஞா.கிஷோர் முன்வைத்தார். குறித்த கோரிக்கையை அனைத்துச் சபை உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டதையடுத்து சபை நிதியில் துப்பாக்கிகளைக் கொள்வனவு செய்வது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (ச-27)

# யாழ். - பொலநறுவை இடையே நல்லிணக்கக் களப்பயணம்!

யாழ்ப்பாணம், ஒக்.21

யாழ்ப்பாணம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களுக்கிடையிலான நல்லிணக்கக் கள விஜயமாக பொலநறுவை மாவட்டச் செயலர் சுஜந்த ஏக்கநாயக்க மற்றும் சமூகசேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு கடந்த சனிக்கிழமை வருகைதந்தனர். இவர்களைக் கடற்றொழில் நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், மாவட்ட மேலதிக செயலர் கை.சிவகரன், மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், உதவி மாவட்டச் செயலர் உ.தர்சினி ஆகியோர் இணைந்து வரவேற்றனர். இதன்போது ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்டச் செயலருக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டதுடன் பழைய பூங்கா வளாகத்தில் பயன்தரு மரக்கன்றுகளும் நடுகை செய்யப்பட்டன. (ச-41-66)



**கடை வாடகைக்கு உண்டு**
மானிப்பாய் வீதி, ஆலடி சந்தியில் கடை தொகுதி வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 411 8851
077 505 8561

**வீடு வாடகைக்கு**
இராமநாதன் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 076 882 8694
077 411 8851

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org